Proceedings of Jaffna University International Research Conference (JUICE-2012), pp. 105-109, published: March 2014, Sri Lanka

# மட்டக்களப்பு மேற்குப் பிரதேசத்தில் யுத்தத்திற்குப் பின்னரான சிறுவர்களின் கல்வி மேம்பாடு

பொ. நிலாந்தினி
வரலாற்றுத்துறை, கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
ponnila_17@ymail.com

**ஆய்வுச்சுருக்கம்:** மனிதனின் ஏனைய பருவங்களை விடவும் சிறுவர் பருவம் மிகவும் முக்கியத்துவம் மிக்க பருவமாகும். பிள்ளைகள் என்பவர்கள் பெறுமதிமிக்க வளமாகும். ஐக்கிய நாடுகள் சபையின் சிறுவர் உரிமைச் சாசனத்தின்படி 18 வயதுக்குக் குறைந்த மனிதப்பிறவி ஒவ்வொன்றும் "ஒரு பிள்ளை" எனக் கருதப்படும். மிகச்சிறந்த ஒரு உலகை நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்படும் முயற்சியின்போது பிள்ளைகளின் கல்வி மேம்பாட்டில் கவனம் செலுத்த வேண்டியது சமூகத்தினதும் அரசாங்கத்தினதும் முக்கிய ஒரு பொறுப்பாகும். மட்டக்களப்பு பிரதேசமானது கடந்த 30 ஆண்டுகளாக யுத்தத்தின் காரணமாக வெகுவாகப் பாதிக்கப்பட்ட ஒரு பிரதேசமாக விளங்குகின்றது. இப்பிரதேசத்தின் நடுவண் அமைந்துள்ள வாவியை மையமாகக் கொண்டு கிழக்கு, மேற்கு என இரு பிரதான பிரிவுகளுக்கு உட்படுத்த முடியும். இதன் மேற்குப்பகுதி படுவான்கரை என்றும் கிழக்குப் பகுதி எழுவான்கரை என்றும் அழைக்கப்படுகின்றது. யுத்தகாலத்திலே படுவான்கரைப்பகுதி நேரடியான தாக்குதலுக்கு உள்ளாகியிருந்தது. அரசாங்க கல்வித் திணைக்களத்தின் நேரடியான கட்டுப்பாட்டிற்கு உட்படாத பிரதேசமான இது அதிக கஷ்டப் பிரதேசமாகக் கணிக்கப்பட்டது. இதனால் இப்பிரதேசத்துச் சிறார்களின் கல்விநிலை மிகமோசமான பின்னடைவினை கண்டிருந்தது. மட்டக்களப்புப் பிராந்தியத்தின் மேற்குவலயப்பகுதி மூன்று கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. அவையாவன: மண்முனை மேற்கு, மண்முனை தென்மேற்கு, ஏறாவூர்ப்பற்றுக் கோட்டங்களாகும். இம்மூன்று கோட்டங்களை உள்ளடக்கியதாகவே ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இன்று அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் சிறுவர்களின் கல்வி விருத்தியில் அக்கறை செலுத்தி வருகின்றன. இந்நிலையில் மட்டக்களப்பு மேற்கு வலயப்பிரதேசத்தில் யுத்தத்திற்குப் பின்னரான சிறுவர்களின் கல்வி மேம்பாடு பற்றிய ஆய்வு காலத்தின் தேவையாக அமைகின்றது. அந்தவகையில் நேரடிக்கள ஆய்வு, வினாக்கொத்து, மேற்கு வலயப் பணிப்பாளர்கள் மற்றும் தன்னார்வத் தொண்டர்களுடனான கலந்துரையாடல் என்பவற்றின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளின் அடிப்படையில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது. அத்தோடு ஆய்வின் மூலமாக இப்பிரதேச சிறார்களின் கல்வி அபிவிருத்தி மேம்பாட்டுத்திட்டங்கள் எந்தவகையில் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்பதுபற்றியதாகவும் அவற்றினை மேலும் விரிவுபடுத்துவதற்கான தீர்வாலோசனைகள் பற்றியதாகவும் இவ்வாய்வு அமைகின்றது.

## I. ஆய்வு அறிமுகம்

இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்ற கோட்பாட்டிற்கமைய ஒவ்வொரு நாட்டினதும் எதிர்காலம் சிறுவர்களின் கைகளில்தான் தங்கியுள்ளது. சிறுவர்கள் உடல் ரீதியாகவும் உளரீதியாகவும் தங்களைத் தனித்து வழிநடத்திச் செல்லக்கூடிய ஆற்றல் அற்றவர்களாகக் காணப்படுகின்றனர். இதனால்தான் இப்பருவத்தில் அவர்களது கல்வி வளர்ச்சிக்கும் ஆளுமை விருத்திக்குமான அடித்தளத்தினை அவர்களது குடும்பம், சுற்றுச்சூழல் காரணிகள் தீர்மானிக்கின்றன. அந்தவகையில் மட்டக்களப்பு மேற்குப் பிரதேசத்தில் யுத்தத்திற்குப் பின்னரான சிறுவர்களின் கல்வி மேம்பாடு என்ற தலைப்பில் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகின்றது.

மட்டக்களப்புப் பிராந்தியத்தின் மேற்குவலயப்பகுதி மூன்று கோட்டங்களாகப் பிரிக்கப்பட்டுள்ளது. இம்மூன்று கோட்டத்திற்குரிய ஆய்வுப்பகுதியில் 60 பாடசாலைகள் காணப்படுகின்றன. இவற்றில் 10 பாடசாலைகள் எழுமாற்றாகத் தெரிவு செய்யப்பட்டு ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

**அட்டவணை 01:** எழுமாற்றாகத் தெரிவு செய்த பத்துப் பாடசாலைகளின் விபரம்

| S.No | Name of the School | Type | Span | Students Total | | Total |
|---|---|---|---|---|---|---|
| | | | | B | G | |
| 1. | BT/Karadiyanaru M.V | IC | 1-13 | 481 | 504 | 985 |
| 2. | BT/Navatkaddu Namakal Vidyalayam | IC | 1-13 | 414 | 455 | 869 |
| 3. | BT/Ampilanthurai Kalaimahal Vidyalayam | IC | 1-13 | 362 | 363 | 725 |
| 4. | BT/Mahiladitivu Saraswathy Vidyalayam | II | 1-11 | 307 | 342 | 649 |
| 5. | BT/Vavunathivu Parameswara Vidyalayam | II | 1-11 | 103 | 98 | 201 |
| 6. | BT/Eachanthivu RKMT Vidyalayam | II | 1-09 | 95 | 100 | 195 |
| 7. | BT/Karavedddy South GTMS | III | 1-5 | 66 | 70 | 136 |
| 8. | BT/Kurinchamunai GTMS | III | 1-5 | 75 | 84 | 159 |
| 9. | BT/Paddipali GTMS | III | 1-5 | 40 | 30 | 70 |
| 10. | BT/Mavilaiyaru Kailan Vidyalayam | III | 1-5 | 31 | 25 | 56 |

**அட்டவணை 02:** எழுமாற்றாகத் தெரிவு செய்த பத்துப் பாடசாலை மாணவர்களது புலமைப் பரீட்சை மற்றும் க.பொ.த சாதாரண தரத்தினை மையப்படுத்தியதாக யுத்தத்திற்குப் பின்னரான சிறுவர்களின் கல்வி விருத்தி தொடர்பான மதிப்பீடு

| Name of the School | Type | Span | Scholarship Exam | | | | | | G.C.E. (O/L) Exam | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | 2010 | | | 2011 | | | 2009 | | 2010 | | 2011 | |
| | | | Sat | Pd | LPM-80 | Sat | Pd | LPM-80 | Sat | Pd | Sat | Pd | Sat | Pd |
| BT/Karadiyanaru Maha Vidyalayam | IC | 1-13 | 38 | 0 | 12 | 23 | 1 | 10 | 57 | 4 | 61 | 20 | 90 | 9 |
| BT/Navatkaddu Namakal Vidyalayam | IC | 1-13 | 51 | 0 | 13 | 53 | 0 | 9 | 50 | 30 | 50 | 15 | 50 | 30 |
| BT/Ampilanthurai Kalaimahal Vidyalayam | IC | 1-13 | 40 | 0 | 21 | 38 | 6 | 28 | 34 | 9 | 45 | 31 | 47 | 24 |
| BT/Mahiladitivu Saraswathy Vidyalayam | II | 1-11 | 41 | 4 | 20 | 43 | 4 | 20 | 43 | 5 | 42 | 13 | 38 | 17 |
| BT/Vavunathivu Parameswara Vidyalayam | II | 1-11 | 11 | 0 | 2 | 11 | 0 | 5 | - | - | - | - | 10 | 7 |
| BT/Eachanthivu RKMT Vidyalayam | II | 1-09 | 24 | 0 | 4 | 27 | 0 | 8 | - | - | - | - | - | - |
| BT/Karavedddy South GTMS | III | 1-5 | 23 | 0 | 5 | 21 | 1 | 8 | - | - | - | - | - | - |
| BT/Kurinchamunai GTMS | III | 1-5 | 14 | 0 | 6 | 19 | 0 | 2 | - | - | - | - | - | - |
| BT/Paddipali GTMS | III | 1-5 | 10 | 1 | 7 | 14 | 0 | 3 | - | - | - | - | - | - |
| BT/Mavilaiyaru Kailan Vidyalayam | III | 1-5 | 10 | 0 | 4 | 11 | 0 | 8 | - | - | - | - | - | - |

ஒவ்வொரு பாடசாலையிலிருந்தும் ஐந்து மாணவர்கள் வீதம் எழுமாற்றாகத் தெரிவு செய்து அவர்களிடம் பேட்டிகாணல், வினாக்கொத்து மூலம் தகவல்களைத் திரட்டல். மற்றும் பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், பெற்றோர்கள், வலயக்கல்வி பணிப்பாளர்கள் போன்றோருடன் மேற்கொண்ட கலந்துரையாடலினூடாகப் தரவுகள் சேகரிக்கப்பட்டன. சேகரிக்கப்பட்ட தரவுகள், அளவை நிலை ஆய்வு (Survey Research) முறையியலை அடிப்படையாகக் கொண்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

## II. யுத்தத்திற்குப் பின்னர் சிறுவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக முன்னெடுக்கப்பட்டுவரும் செயற்திட்டங்கள்

1. தாய்மாருக்கான மாலைநேர வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன

ஒரு பிள்ளையினுடைய கல்வி விருத்திக்கு அடிப்படை அலகாக அமைவது குடும்பமாகும். அந்தவகையில் பெற்றோருக்கு சிறந்தமுறையில் சிறுவர்களின் கல்வி பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துகின்றபோது அக்குடும்பம் மட்டுமின்றி அச்சமுதாயமே முன்னேற்றமடைகின்றது. அந்தவகையில் மேற்குவலயப் பிரதேசங்களில் தாய்மார்கள் வேலைக்குச் செல்வது அரிது. எனவே போதிய ஒய்வுநேரம் கிடைக்கின்றது. இதன் காரணமாக இவர்களுக்கு மாலைநேர வகுப்புக்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

அவர்களது குடும்பப்பின்னணி எத்தகையது. அவர்களது பொருளாதாரத்தை விருத்தி செய்ய எத்தகைய நடவடிக்கைகளை முன்னெடுக்க வேண்டும். என்பவற்றைப் புரிந்துகொண்டு குழந்தைகளின் அடிப்படைக்கல்வி, அதற்கான ஊக்குவிப்பு முதலீடுகள், சுய கைத்தொழில் நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

2. பிரத்தியேக வகுப்புக்கள் நடாத்தப்படுகின்றன

மாணவர்களுக்கு கல்வி கற்கக்கூடிய சூழலை உருவாக்கிக் கொடுக்க வேண்டியது ஒவ்வொரு சமூகத்தினதும் தலையாய கடமையாகும். இப்பிரதேசங்களில் அனுபவம் வாய்ந்த வளவாளர்களைக் கொண்டு பிரத்தியேக வகுப்புக்களை இலகுவாக நடாத்துகின்றனர். குறிப்பாக இரவுப் பகுதிநேர வகுப்புக்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. புலமைப்பரீட்சை க.பொ.த சாதாரண, உயர்தர மாணவர்களை முதன்மைப்படுத்தி கல்விக் கருத்தரங்கு வகுப்புக்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

3. மேற்குப் புதிய கல்வி வலயம் உருவாக்கப்பட்டுள்ளது

யுத்தத்திற்கு பின்னர் சிறார்களின் கல்விநிலையை மேம்படுத்தும் நோக்கில் மேற்கு பகுதியில் புதிய கல்வி வலயம் உருவாக்கப்பட்டு அபிவிருத்தியை நோக்காகக் கொண்டு செயற்பாடுகள் முன்னெக்கப்பட்டு வருகின்றன.

4. கற்றலுக்கான பொருளாதார வசதிகள்

யுத்தகாலத்திலே படிக்கின்ற மாணவர்களுக்கான மின்சார வசதி, போக்குவரத்து வசதிகள் இன்மையால் பல இடர்பாட்டுடனே கல்வியைத் தொடர வேண்டிய நிலை இருந்தது. ஆனால் இன்று துரித அபிவிருத்தி திட்டங்களினூடாக பெரும்பாலான வீடுகளில் மின்சார விநியோகம், வீதிப் புனரமைப்பு வேலைத்திட்டங்கள் இப்பிரதேசத்தினை நோக்கியதாக துரிதமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் காரணமாக சிறுவர்கள் இரவு நேரங்களில் தமது கற்றல் நடவடிக்கைகளை சிறப்பான முறையில் முன்னெடுப்பதற்கும் நேரத்திற்கு பாடசாலை சென்றடைவதற்குமான சூழல் உருவாகியுள்ளது.

5. கிராமங்கள் தோறும் கல்வி அபிவிருத்திக்குழு

யுத்தத்திற்கு பின்னரான கிராமங்களின் கல்வி அபிவிருத்தி நிலைகருதி ஏற்கனவே செயற்பட்டுவரும் மீனவர் சங்கம், வயோதிபர் சங்கம், விளையாட்டுக் கழகம், ஆலய நிருவாக உறுப்பினர்கள், மகளிர் கழகம் போன்றன கிராமத்தில் அனைத்துக்குழு உறுப்பினர்களையும் உள்ளடக்கிய விதத்தில் சிறார்களின் கல்வி விருத்தியை ஏற்படுத்தும் வகையில் அவர்களுக்குரிய பிரச்சினைகளைக் கண்டறிந்து அதற்குரிய செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

6. மாணவர்களின் இணைப்பாடவிதான செயற்பாடு

யுத்தகாலத்தில் குறித்த வகுப்பறைக்குள் மட்டும் முடங்கிக்கிடந்த சிறார்கள் யுத்தத்திற்குப் பின்னர் கற்றல் நடவடிக்கை தொடர்பான களஆய்வு, கல்விச் சுற்றுலாக்களுடனான அனுபவக் கல்வியையும் பெற்று சிறந்த ஆளுமை விருத்தியுள்ள சிறார்களாக தங்களது இணைப்பாட விதான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றனர்.

அதுமட்டுமின்றி சாரணியர் இயக்கம், விளையாட்டுக்கழகம், வினாவிடைப் போட்டிகள், விளையாட்டு நிகழ்வுகள் போன்றவற்றிலும் பங்கு கொண்டு சிறந்த அனுபவங்களைப் பெற்றுக் கொள்வதோடு ஏனைய பாடசாலை மாணவர்களுடனான தொடர்பாடல் விருத்தியும் அதிகரிக்கப்பட்டு வருகின்றது. குறிப்பாக பாவற்கொடிச்சேனை பாடசாலை மாணவி யசோதனா தேசிய மட்டத்தில் ஓட்டப்பந்தயத்தில் முதலிடத்தினைப் பெற்று சாதனை படைத்துள்ளார்.

7. மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயத்தில் க.பொ.த உயர்தர கற்கை நெறிகள் ஆரம்பம்

யுத்த காலத்தில் கலைத்துறையை மட்டுமே க.பொ.த உயர்தரத்தில் கற்றுவந்த மாணவர்கள் இன்று ஏனைய கற்கைத்துறைகளும் ஆரம்பிக்கப்பட்டு தங்களது பாடசாலைகளிலே கல்வி கற்கக்கூடிய சூழல் உருவாகியுள்ளது. குறிப்பாக மட்டக்களப்பு மேற்கு வலயத்திலுள்ள நாவற்காடு பாடசாலையில் வர்த்தகபீடம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது (2011). அதேபோன்று முதலைக்குடா பாடசாலை தரம் ஒன்று AB ஆகத் தரமுயர்த்தப்பட்டு அங்கு வணிகத்துறை, விஞ்ஞானத்துறை மற்றும் கணிதப்பிரிவுக்குரிய கற்கை நெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

8. பாடசாலைகள் தரமுயர்த்தப்படலும் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்களின் இடமாற்றமும்

யுத்தத்திற்குப் பின்னர் மட்டக்களப்பு மேற்குக் கல்வி வலயத்தில் முதலாவது பாடசாலையாக முதலைக்குடா பாடசாலை (2011) தரமுயர்த்தப்பட்டு அங்கு விஞ்ஞான, கணித, வர்த்தக, கலைப் பிரிவுகள் க.பொ.த உயர்தரப் பாடங்களாகச் சேர்த்துக் கொள்ளப்பட்டுள்ளன. இன்று போக்குவரத்து வசதிகளின் சீராக்கத்தினால் அனுபவம் வாய்ந்த ஆசிரியர்கள் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயப் பாடசாலைகளுக்கு இடமாற்றப்பட்டு குறித்த பாடசாலைகளுக்கு உரிய நேரத்திற் சென்று தமது கற்பித்தல் செயற்பாடுகளை ஆர்வத்துடனும் ஊக்கத்துடனும் முன்னெடுத்து வருகின்றனர் (ஆசிரியர் சமப்படுத்தல்).

9. பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் நியமனமும் முக்கிய பாடங்களுக்கான ஆசிரியர்கள் சேர்த்துக் கொள்ளப்படலும்

சிறார்களின் எதிர்காலத்தினைக் கருத்திற் கொண்டு நடைமுறைக் கல்வியையும் தொழில் வாய்ப்பிற்குரிய கற்றல் பாடவிதான செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில் 5E Method கற்பித்தல்முறை மற்றும் ஆங்கில, கணித, விஞ்ஞான ஆசிரியர்கள் புதிதாக சேர்த்துக் கொள்ளப்பட்டு மிகுந்த பயிற்சியுடன் மட்டக்களப்பு மேற்கு கல்வி வலயப் பிரதேசத்தில் உள்ள பாடசாலைகளுக்கு உள்வாங்கப்பட்டுள்ளனர். அத்தோடு ஆசிரியர்களுக்கான வாண்மை சம்பந்தமான பயிற்சிக் கருத்தரங்குகள், ஆலோசனைகள், அவர்களது மேற்படிப்புக்குரிய வழிகாட்டற் செயற்பாடுகளையும் சிறந்த முறையில் முன்னெடுத்து வருகின்றனர்.

10. சிறுவர் உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வு சர்வதேச நிறுவனங்களினூடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது

யுத்தத்திற்குப் பின்னரான சிறுவர்களின் கல்வி விருத்தி, அவர்களது உரிமைகள், உரிமை மீறல்கள், இடைவிலகிய மாணவர்களை பாடசாலைகளில் இணைத்துக் கொள்ளல் (Catchup Education) தொடர்பாக பெற்றோர் மற்றும் ஆசிரியர் குழாத்தினையும் இணைத்த வகையில் அரச மற்றும் அரசசார்பற்ற நிறுவனங்கள் இணைந்து விழிப்புணர்வுக் கருத்தரங்குகளை நடாத்தி வருகின்றன. உதாரணம்: உலக தரிசன நிறுவனம், யுனிசேவ், சேவாலங்கா.

11. ஆயிரம் பாடசாலைகளை அபிவிருத்தி செய்தல் செயற்பாடு

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் வீடுகளுக்கு நேரடியான களஆய்வினை மேற்கொண்டு அவர்களது கல்வி நிலையில் தற்போது எதிர்நோக்குகின்ற பிரச்சினைகள், பொருளாதாரவளம், குடும்பச்சூழல், சுகாதாரவசதி, போசாக்கு தொடர்பான விழிப்புணர்வு செயற்பாடுகளையும் உதவிகளையும் செயற்படுத்தி வருகின்றனர்.

12. தனியார் நிறுவனங்களின் உதவியுடன் முன்பள்ளிகள் அதிகரிப்பு

சிறுவர்களுக்குரிய போசாக்கான உணவுகள், எதிர்பார்ப்புகள், நம்பிக்கைகள், துளிர்விடும் சிந்தனைகள், சந்தோசங்கள் என்பன மழுங்கடிக்கப்படுகின்றபோது உளவியல் ரீதியான பாதிப்புக்களுக்குள்ளாகின்றனர். எனவேதான் சிறுவர்களின் உளவிருத்தி, கற்றல் செயற்பாடுகளை முன்னெடுக்கும் வகையில் அரச மற்றும் தனியார் நிறுவனங்களின் உதவியுடன் முன்பள்ளிகள் யுத்தத்திற்குப் பின்னர் அதிகரிக்கப்பட்டுள்ளன.

13. கிராமங்கள் தோறும் நிறுவப்பட்டு வரும் கிராமிய வங்கிகள்

யுத்தகாலத்தில் நடமாடுவதற்கே அச்சமடைந்த வங்கிக் கிளைகள், இன்று கிளை நிறுவனங்களை நேரடியாகப் பாதிக்கப்பட்ட கிராமங்களில் நிறுவி சிறுவர்களுக்கான சேமிப்புக் கணக்குகள் மற்றும் ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளை வழங்கி அவர்களது கல்வி நடவடிக்கைகளுக்கு சிறப்பான பங்களிப்பினை நல்கி வருகின்றனர்.

## III. தீர்வாலோசனைகள்

- பாடசாலையை விட்டு விலகிய மாணவர்களுக்கு தொழிற்கல்விகளை வழங்க நடவடிக்கை எடுத்தல்.
- மாணவர்கள் தங்கள் கல்வி நடவடிக்கையைச் சிறப்பான முறையில் முன்னெடுப்பதற்கான புறச்சூழலையும் கற்றல் உபகரணங்களையும் பெற்றுக் கொடுத்தல்.
- குழந்தைகளுக்கான போஷாக்கு, சுகாதாரம் போன்ற இதர விடயங்கள் பற்றி பெற்றோருக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தல்.
- யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களின் குடும்பங்களுக்கான சுயதொழில் திட்டங்களை முன்னெடுத்தல்.
- மாணவர்களின் இணைப்பாடவிதான செயற்பாடுகளை அதிகரித்தல்.
- வறுமை ஒழிப்புத்திட்டங்கள், குடிநீர்ப் பிரச்சினைகள், மின்சார வசதிகள், பௌதீக வளங்கள், பாதைகள் சீரமைப்பு, மேம்பாலங்கள் அமைத்தல் போன்ற அபிவிருத்திச் செயற்திட்டங்களை துரிதகதியில் முன்னெடுத்தல்.
- வலயமட்ட அதிகாரிகள், பாடசாலை அதிபர், ஆசிரியர்கள், இணைப்பாளர்கள், பெற்றோர்கள் போன்ற அனைத்துத்துத் தரப்பினர்களும் இணைந்து மாணவர்களின் கல்வி விருத்திக்குப் பங்காற்றல்.
- ஆசிரியர் பற்றாக்குறையை நிவர்த்தி செய்தல்.

போன்ற செயற்திட்டங்களை அர்ப்பணிப்புடனும் வினைத் திறனுடனும் முன்னெடுக்கின்றபோது மட்டக்களப்பு மேற்குவலயச் சிறுவர்களின் கல்வி விருத்தியை மேம்பாடடையச் செய்வதோடு சிறந்தவொரு எதிர்கால சமூகத்தையும் உருவாக்க முடியும் என்பது திண்ணம்.

## உசாத்துணை நூல்கள்

[1]. மேற்கு வலய கல்வி அலுவலகத்தில் பெற்றுக் கொண்ட தரவுகள், களஆய்வு.
[2]. அருள்மொழி, செ., கல்வி ஆய்வு முறைகள், எவகிறீன் பிரிண்டர்ஸ், 2008.
[3]. ஜெயராசா, சபா., கற்றல் உளவியல், மேமடு புத்தகசாலை, 2008.
[4]. சுப்பிரமணியம், வ., நிறைவான கல்விக்கு, கல்விக்கதிர் வெளியீடு, 1997.
[5]. ஜெயராசா, சபா., கல்வியியல் புதிய சீர்திருத்தங்கள், அகவிழி வெளியீடு, 2006.
[6]. செல்வராசா, மா., கல்வியியல் அடிப்படை எண்ணக்கருக்கள், கிறிப்ஸ்பிரிண்டஸ், 2005.